இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in


நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 64 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – புரட்டாசி 28 – செவ்வாய்க்கிழமை 14 அக்டோபர் 2025 – சென்னை 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 64 : Thiruvalluvar Year - 2056 - Purataasi 28 - Tuesday 14 October 2025 - Chennai 12 Pages ₹ 5.00



# தமிழ்நாடு சட்டமன்றம் இன்று தொடங்குகிறது!




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (13.10.2025) தலைமைச் செயலகத்தில், சட்டத்துறை சார்பில் மதுரை அரசு சட்டக் கல்லூரியில் 48 கோடியே 20 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள கல்விசார் மற்றும் நிருவாக தொகுதி கட்டடங்கள் மற்றும் வேலூர் அரசு சட்டக் கல்லூரியில் 6 கோடியே 46 இலட்சத்து 85 ஆயிரம் ரூபாய் செலவில் தரை மற்றும் இரண்டு தளங்களுடன் கட்டப்பட்டுள்ள நூலகக் கட்டடம் ஆகியவற்றை காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில், அமைச்சர் துரைமுருகன், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், சட்டத்துறைச் செயலாளர் சி.ஜார்ஜ் அலெக்சாண்டர், சட்டக் கல்வி இயக்குநர் முனைவர்.ஜெ.விஜயலட்சுமி ஆகியோர் கலந்து கொண்டனர்.

### கரூர் விவகாரம்; உச்ச நீதிமன்றத்தில்

## சி.பி.ஐ. விசாரணை கோரிய மனுவில் முறைகேடுகள்!

### “மோசடியாக மனுதாக்கல் செய்தது உறுதியானால் இடைக்கால உத்தரவு ரத்து” என நீதிபதிகள் உறுதி!

புதுடெல்லி, அக். 14 –

கரூர் துயரம் தொடர்பாக சி,பி,ஐ, விசாரணை கோரிய மனுவில் முறைகேடுகள் நடந்துள்ளதாக பாதிக்கப்பட்டவர்கள் சார்பில் உச்சநீதிமன்றத்தில் முறையீடு செய்யப்பட்டது. மோசடியாக மனு தாக்கல் செய்தது உறுதி செய்யப்பட்டால், இடைக்கால உத்தரவு ரத்து செய்யப்படும் என நீதிபதிகள் உறுதிப்படத் தெரிவித்துள்ளனர்.


கரூர் கூட்ட நெரிசலில் 41பேர் பலியானதற்கு விஜய் தாமதமாக வந்ததே காரணம் என்று உச்சநீதிமன்றத்தில் தமிழ்நாடு அரசு தெரிவித்திருந்தது. கரூர் துயர சம்பவம் குறித்து உயர்நீதிமன்றம் நியமித்த சிறப்பு புலனாய்வுக் குழு விசாரித்து வருவதால் சி.பி.ஐ., விசாரணைக்கு உத்தரவிட வேண்டிய அவசியமில்லை என்றும் தமிழ்நாடு அரசு வாதிட்டது.

இந்நிலையில், இந்த வழக்கு மீண்டும் விசாரணைக்கு வந்த போது, கரூர் துயரம் தொடர்பாக சி.பி.ஐ. விசாரணை நடத்தும் என நீதிபதிகள் இடைக்கால உத்தரவை பிறப்பித்தனர். சி.பி.ஐ. விசாரணையை கண்காணிக்க ஒருசிறப்பு விசாரணைக்குழு அமைக்கப்படும் என்றும், இக்குழுவுக்கு ஓய்வுபெற்ற உச்சநீதிமன்ற நீதிபதி அஜய் ரஸ்தோகி தலைமை வகிப்பார்.அந்த குழுவில் 2 ஐபிஎஸ் அதிகாரிகள் இடம்பெறுவர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து, கரூர் துயர சம்பவத்தில் பாதிக்கப்பட்டவர்கள் சார்பில் மூத்த வழக்கறிஞர்கள் அபிஷேக் சிங்வி, ரச்சனா ஸ்ரீவத்சவா ஆகியோர் ஆஜராகினர். கரூர் துயர சம்பவத்தில் அரசியல் ஆதாயம் தேடும் நோக்கில், பாதிக்கப்பட்டவர்களுக்கே தெரியாமல் தவெக, அ.தி.மு.க. மற்றும் பா.ஜ.க.வினர் உச்சநீதிமன்றத்தில் மனுக்களை தாக்கல் செய்துள்ளதாக அவர்கள் வாதிட்டனர். கரூர் கூட்ட நெரிசலில் உயிரிழந்த குழந்தையின் தந்தை என்ற பெயரில் த.வெ.க.வினர் மனு தாக்கல் செய்ததையும், 8 ஆண்டுகளுக்கு முன்பு மனைவியையும் குழந்தையையும் பிரிந்து சென்ற ஒருவரை அழைத்துவந்து பணத்தை காட்டி ஏமாற்றி அவரது பெயரில் த.வெ.க.வினர் மனு தாக்கல் செய்துள்ளதாகவும் அவர்கள் சுட்டிக்காட்டினர். மனுதாரர்களுக்கே தெரியாமல் அவர்கள் பெயரில் உச்சநீதிமன்றத்தில் மனுக்களை தாக்கல் செய்துள்ளது மிகப்பெரிய மோசடி என்றும் வழக்கறிஞர்கள் வாதிட்டனர்.

கரூர் கூட்ட நெரிசலில் உயிரிழந்த சந்திரா என்பவரது கணவர் செல்வராஜ், உச்சநீதிமன்ற அமர்வில் காணொலி மூலம் ஆஜராகி தனது தரப்பு விளக்கத்தை அளித்தார். இந்த வாதங்களை பதிவு செய்து கொண்ட நீதிபதிகள், போலி மனு தாக்கல் செய்த விவகாரத்தை விரிவாக ஆய்வு செய்து உரிய உத்தரவு பிறப்பிக்கப்படும் எனக் கூறி விசாரணையை ஒத்திவைத்தனர்.

## 4 நாட்கள் நடைபெறும் என பேரவைத் தலைவர் பேட்டி!



**சென்னை, அக். 14 –**

**தமிழ்நாடு சட்டமன்றக் கூட்டத்தொடர் இன்று தொடங்குகிறது. இக்கூட்டத் தொடர் நான்கு நாட்கள் நடைபெறும் என பேரவைத் தலைவர் மு.அப்பாவு அவர்கள் தெரிவித்துள்ளார்.**

தமிழக சட்டசபையின் இந்த ஆண்டின் முதல் கூட்டம் ஜனவரி மாதம் 6ந் தேதி கவர்னர் உரையுடன் தொடங்கியது. இந்த கூட்டம் 4 நாட்கள் நடைபெற்றது.

அதைத்தொடர்ந்து மார்ச் 14ந் தேதி சட்டசபையில் 2025 - 2026ம் ஆண்டுக்கான பொது பட்ஜெட் தாக்கல் செய்யப்பட்டது. மறுநாள் வேளாண் பட்ஜெட் தாக்கல் ஆனது. அதைத் தொடர்ந்து, மார்ச் 17ந் தேதி முதல் 21ந் தேதி வரை 2 பட்ஜெட்டுகள் மீதான பொது விவாதம் நடைபெற்றது.

மார்ச் 24ந் தேதி முதல் ஏப்ரல் 29ந் தேதிவரை துறை வாரியாக மானியக் கோரிக்கை மீதான விவாதங்கள் நடந்தன. பின்னர் தேதி குறிப்பிடாமல் சட்டசபை கூட்டம் தள்ளி வைக்கப்பட்டது. இந்தநிலையில் 6 மாத கால இடைவெளியில் சட்டசபை மீண்டும் கூட்டப்பட வேண்டும் என்ற அவை விதியின் அடிப்படையில், தமிழக சட்டசபை மீண்டும் இன்று கூடுகிறது.

சட்டசபை கூடியதும், மறைந்த உறுப்பினர்களுக்கு இரங்கற்குறிப்பு வாசிக்கப்படுகிறது. கரூர் சம்பவத்தில் உயிரிழந்தவர்களுக்கு சட்டசபையில் இரங்கல் தெரிவிக்கப்படுகிறது.

அதனைத்தொடர்ந்து, வால்பாறை தொகுதி எம்.எல்.ஏ.வாக இருந்த அமுல் கந்தசாமி மறைவுக்கு இரங்கல் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு அவை அலுவல்கள் ஒத்திவைக்கப்படுகிறது.

**அலுவல் ஆய்வு கூட்டம்!**

இந்த சட்டசபை கூட்டத் தொடரில் காசா போர் நிறுத்தம் தொடர்பாக தீர்மானம் கொண்டு வரப்பட உள்ளது. சட்டசபை தேர்தல் நெருங்குவதால் இந்த கூட்டத்தில் கார சார விவாதத்திற்கு பஞ்சம் இருக்காது.

இந்த கூட்டத்தொடரை எத்தனை நாட்கள் நடத்துவது என்பது குறித்து விவாதிப்பதற்காக சபாநாயகர் அப்பாவு அவர்கள் தலைமையில் அலுவல் ஆய்வுக்குழு கூட்டம் நேற்று நடைபெற்றது. இக்கூட்டத்தில் ஆளுங்கட்சி மற்றும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

அதன்பின்னர் செய்தியாளர்கள் சந்திப்பில் பேரவைத் தலைவர் கூறியதாவது ; –

நாளை (இன்று) சட்டப் பேரவை கூடுகிறது. மறைந்த முன்னாள் ஐ.ஏ.எஸ். அதிகாரி பீலா வெங்கடேசன், ஜார்கண்ட் முதல்வராக இருந்த சிபு சோரன் உள்ளிட்டோருக்கு இரங்கல் குறிப்பு வாசிக்கப்படும். மேலும், மறைந்த எம்.எல்.ஏ. அமுல் கந்தசாமிக்கு இரங்கல் தீர்மானம் நிறைவேற்றப்படும். கரூர் கூட்ட நெரிசலில் இறந்தோருக்கு அஞ்சலி செலுத்தப்படும்.

அக். 15ம் தேதி கூடுதல் மானியக் கோரிக்கை முன் வைக்கப்படும். அதனைத் தொடர்ந்து மானியக் கோரிக்கைகள் மீதான விவாதம் நடைபெறும். அக்.17ம் தேதி விவாதத்திற்கு பதிலுரை அளிக்கப்படும் என்று தெரிவித்தார்.

### சட்டத்துறை சார்பில் ரூ.55.68 கோடியில்

# மதுரை – வேலூர் சட்டக் கல்லூரிகளில் புதிய கட்டடங்கள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் காணொலி மூலம் திறந்து வைத்தார்!

**சென்னை, அக். 14 –**

**சட்டத்துறை சார்பில் ரூ.55.68 கோடி செலவில் மதுரை அரசு சட்டக் கல்லூரிக்கான புதிய கல்விசார் மற்றும் நிருவாக தொகுதி கட்டடங்கள், வேலூர் அரசு சட்டக் கல்லூரியில் புதிய நூலகக் கட்டடம் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்தார்.**

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (13.10.2025) தலைமைச் செயலகத்தில், சட்டத்துறை சார்பில் மதுரை அரசு சட்டக் கல்லூரியில் 48 கோடியே 20 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள கல்விசார் மற்றும் நிருவாக தொகுதி கட்டடங்கள் மற்றும் வேலூர் அரசு சட்டக் கல்லூரியில் 6 கோடியே 46 இலட்சத்து 85 ஆயிரம் ரூபாய் செலவில் தரை மற்றும் இரண்டு தளங்களுடன் கட்டப்பட்டுள்ள நூலகக் கட்டடம் ஆகியவற்றை காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்தார்.

நீதித்துறையின் மேம்பாட்டிற்காக இவ்வரசு பொறுப்பேற்றதிலிருந்து, நீதிமன்றக் கட்டடங்கள் மற்றும் அரசு சட்டக் கல்லூரி களின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்திட, புதிதாக பல்வேறு இடங்களில் நீதிமன்றக் கட்டடங்கள் கட்டுதல், அரசு சட்டக் கல்லூரிகளுக்கு புதிய கூடுதல் கட்டடங்கள் கட்டுதல், நூலகங்களுக்கு புதிய புத்தகங்கள் வழங்குதல், தமிழ்நாடு வழக்கறிஞர் நலநிதியத்திலிருந்து உயிரிழந்த வழக்கறிஞர்களின் குடும்பத்தினருக்கு வழங்கப்படும் நிதியுதவியை 10 இலட்சம் ரூபாயாக உயர்த்தியது, உள்ளிட்ட பல்வேறு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**மதுரை அரசு சட்டக் கல்லூரிக்கான புதிய கல்விசார் மற்றும் நிருவாக தொகுதி கட்டடம்!**

மதுரை மாவட்டம், தல்லாகுளம், தங்கராஜ் சாலையில் 1,35,088 சதுர அடி பரப்பளவில் 48 கோடியே 20 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள மதுரை அரசு சட்ட கல்லூரிக்கான புதிய கல்விசார் மற்றும் நிருவாக தொகுதி கட்டடத்தை முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார். இப்புதிய கட்டடம் 25 வகுப்பறைகள், கருத்தரங்கு மண்டபம், காணொளி காட்சி அறை, சொற்பொழிவு அறை, உள்விளையாட்டு அரங்கம், மாணவ, மாணவியருக்கு தனித்தனி ஓய்வு அறைகள், மாதிரி நீதிமன்ற அரங்கம் மற்றும் நவீன தரத்தில் கல்லூரி அலுவலகம் ஆகிய பல்வேறு வசதிகளுடன் கட்டப்பட்டுள்ளன.

**வேலூர் அரசு சட்டக் கல்லூரிக்கான புதிய நூலகக் கட்டடம்!**

2022-2023ஆம் ஆண்டிற்கான சட்டத்துறை மானியக் கோரிக்கையில், வேலூர் அரசு சட்டக் கல்லூரிக்கு புதிய நூலகம் கட்டப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

அந்த அறிவிப்பிற்கிணங்க, வேலூர் மாவட்டம், காட்பாடி வட்டம், காந்தி நகரில் 20,000 சதுர பரப்பளவில் 6 கோடியே 46 இலட்சத்து 85 ஆயிரம் ரூபாய் செலவில் வேலூர் அரசு சட்டக் கல்லூரிக்கு தரை மற்றும் இரண்டு தளங்களுடன் புதிதாக கட்டப்பட்டுள்ள நூலகக் கட்டடத்தை முதலமைச்சர் அவர்கள் மாணவர்களின் பயன்பாட்டிற்காக திறந்து வைத்தார்.

இக்கட்டடம் மாணவர்களுக்கான குறிப்புதவி பிரிவு, புத்தகங்கள் வழங்கும் பிரிவு, அதிவேக இணையதள வசதியுடன் கூடிய மின் மண்டலம், கருத்தரங்கு கூடம் மற்றும் நூலகர் அறை போன்ற பல்வேறு வசதிகளுடன் கட்டப்பட்டுள்ளது.

இந்நிகழ்ச்சியில் நீர்வளம் மற்றும் சட்டத்துறை அமைச்சர் துரைமுருகன், தலைமைச் செய லாளர் நா.முருகானந்தம், சட்டத் துறைச் செயலாளர் சி.ஜார்ஜ் அலெ சாண்டர், சட்டக் கல்வி இயக்குநர் முனைவர் ஜெ.விஜயலட்சுமி ஆகியோர் கலந்து கொண்டனர்.